## திருப்பூர் மாநகரை

# கண்ணிமைக்காமல் கண்காணிக்கும் 3ம் கண்

### முக்கிய குற்ற வழக்குகளில் உதவியதாக போலீசார் தகவல்



திருப்பூர் மாநகரம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளது. இதில் பதிவாகும் காட்சிகளை காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

திருப்பூர், ஜூலை 22: திருப்பூர் மாநகரம் முழுவதும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் காவல் துறை மற்றும் மாநகராட்சி சார்பில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளது. குற்ற சம்பவங்களை தவிர்க்கும் வகையில் ஆயிரக்கணக்கான கண்காணிப்பு கேமராவில் பதிவாகும் காட்சிகளை காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

பின்னலாடை உற்பத்தியில் உலக அளவில் பிரசித்தி பெற்ற மாநகரமாக உள்ளது திருப்பூர். பின்னலாடை மற்றும் அதனை சார்ந்த பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பணிபுரிவதற்காக தமிழகம் மட்டுமல்லாது பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் குடிபெயர்ந்து தங்கி பணிபுரிந்து வருகின்றனர். இதன் காரணமாக, லட்சக்கணக்கான பொதுமக்கள் வசிக்கக்கூடிய மாநகரமாக வளர்ந்து வருகிறது.

மக்கள் தொகை அதிகரித்து வரக்கூடிய நிலையில் குற்ற சம்பவங்களை கண்காணிப்பதிலும் அதனை கட்டுப்படுத்துவதிலும் போலீசார் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு உதவியாக கண்காணிப்பு கேமராக்கள் தற்போது கண் இமைக்காமல் திருப்பூர் மாநகரை கண்காணித்து வருகிறது. திருப்பூர் மாநகரில் 8 காவல் நிலையங்கள் தவிர 2 போக்குவரத்து மற்றும் மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. மாநகரின் குற்ற சம்பவங்களை தடுக்கக்கூடிய வகையில் போலீசார் ரோந்து பணி மேற்கொண்டு வருகின்றனர். இரவு நேர ரோந்து பணியும் மேற்கொள்ளப்படுவதோடு ரோந்து பணியில் ஈடுபடும் போலீசார் விவரங்கள் பொதுமக்களுக்கு சமூக வலைதளங்கள் மூலமாக தினந்தோறும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், முக்கிய சாலை சந்திப்புகள் உள்ளிட்ட இடங்களில் புறக்காவல் நிலையம் மற்றும் போலீஸ் பூத் ஆகியவை அமைத்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியில் போலீசாருக்கு பேருதவியாக கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. இதன் காரணமாக மாநகர போலீஸ் சார்பில் 442 இடங்களில் 1200க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மாநகரில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாககூடிய காட்சிகள் அந்தந்த காவல் நிலையங்களிலேயே கண்காணிப்பு அறை அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தங்கள் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக கூடுதல், சந்தேகப்படும்படியான நடமாட்டம், சண்டைகள் உள்ளிட்டவை கண்காணித்து ரோந்து பணியில் உள்ளபோலீசாருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுகின்றன. மேலும் போக்குவரத்து போலீசார் சார்பில் மாநகராட்சி சந்திப்பு, தாராபுரம் சாலை சந்திப்பு, மத்திய பேருந்து நிலையம் ரவுண்டானா, வீரபாண்டி பிரிவு, எஸ்ஏபி தியேட்டர் சிக்னல், வளர்மதி எம்ஜிஆர் சிலை சிக்னல், புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களின் பதிவுகளை கண்காணித்து வருகின்றனர்.

இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் உடனடியாக போக்குவரத்து மாற்றம் செய்து போக்குவரத்தை சீர் செய்து வருகின்றனர். மேலும் சாலை விபத்துகளில் நடந்த உண்மை சம்பவங்களை கண்காணிப்பு கேமராவில் பதிவாகும் காட்சிகள் மூலம் தெளிவுபடுத்துகின்றனர். சாலை விதிகளை மீறுபவர்களும் கண்காணிப்பு கேமராக்களின் கண்காணிப்பில் சிக்கி வருகின்றனர். திருப்பூர் மாநகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற வாலிபரின் தலையை துண்டித்து கொலை செய்த வழக்கு, அசாம் மாநில பெண்ணை கொன்று சூட்கேசில் அடைத்து சாக்கடையில் வீசி சென்ற வழக்கும், அரசு மருத்துவமனையில் குழந்தை கடத்தல், ரயில் பயணத்தில் பணம், நகை கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம், உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் குற்றவாளிகளை கண்டறிய போலீசாருக்கு சிசிடிவி கேமராக்கள் பேருதவியாக இருந்துள்ளது. ரயில்வே போலீசார் சார்பில் ரயில் நிலைய முன்பதிவு அறை, டிக்கெட் வழங்கும் இடம், இரண்டு தண்டவாளங்கள், சரக்கு புக்கிங் அறை உள்ளிட்ட பகுதிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் அமைத்துள்ளனர்.

இது குறித்து மாநகர போலீசார் கூறுகையில், "திருப்பூர் மாநகரில் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருக்கம் அதிகரித்து வருகிறது. அதனை பொறுத்து குற்ற சம்பவங்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுத்திட கண்காணிப்பு கேமராக்கள் பெரிதும் உதவி புரிகின்றன. குற்றசம்பவங்களில் ஈடுபட்டவர்களை விரைந்து கைது செய்யவும் கண்காணிப்பு கேமராக்கள் பயனுள்ளதாக உள்ளன. காவல்துறையினர் மட்டுமல்லாது பொதுமக்களும் முன்வந்து தங்கள் நிறுவனம் மற்றும் வீடுகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்திட வேண்டும். குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு கண்காணிப்பு கேமராக்களின் மீது ஒரு அச்சம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குற்ற சம்பவங்கள் குறைவதற்கான வாய்ப்புள்ளது. கண்காணிப்பு கேமராவும் ஒரு காவலாளி என்பதை மனதில் கொண்டு பொதுமக்கள் அதனை தங்கள் இடங்களில் நிறுவி கொள்ள முன்வர வேண்டும்" என்றனர்.

### சுழலும் கேமராக்களுடன் நடமாடும் வாகனம்

திருப்பூரில் மாநகர காவல்துறைக்கு 360 டிகிரி சுழலும் கேமராக்களுடன் கூடிய நடமாடும் வாகனம் உள்ளது. இது போராட்டம் நடைபெறும் இடங்களில் போராட்டம் நடைபெறும் இடத்தை சுற்றிலும் நடைபெறும் நிகழ்வுகளை கண்காணித்து பதிவு செய்கிறது. இதன் மூலம் எந்த வித அசம்பாவித சம்பவங்களும் நிகழாத வகையில் கண்காணித்து தடுக்க முடிகிறது.

### காவல்துறைக்கு உதவியாக மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் கடந்த 2022ம் ஆண்டு ஒரு குரல் புரட்சி என்னும் திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகராட்சியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், போக்குவரத்து நெரிசல் நிறைந்த இடங்கள் என 44 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதனை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கட்டளை மையத்திலிருந்து கண்காணிக்கின்றனர். பல்வேறு வழக்குகளில் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் நிறுவப்பட்டுள்ள கேமராக்கள் காவல்துறையினருக்கு உதவிகரமாக இருந்துள்ளது.

## ரூ.11 லட்சத்துக்கு காங்கயம் இன மாடுகள் விற்பனை



காங்கயம், ஜூலை 22: காங்கயம் அடுத்துள்ள நத்தக்காடையூர் அருகே பழையகோட்டை மாட்டுத்தாவணியில் காங்கயம் இன மாடுகள் ரூ.11 லட்சத்திற்கு விற்பனையானது.

காங்கயம் தாலுகா, நத்தக்காடையூர் பழையகோட்டையில் காங்கயம் இன மாடுகளுக்கான சந்தை நடைபெற்று வருகிறது. இந்த சந்தையில் காங்கயம் இன மாடுகள் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்படுகிறது. இதில் இடைத்தரகர் இல்லாத சந்தை என்பதால் விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றுள்ளது. மாட்டுச்சந்தையில் மாடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

இந்த வாரச்சந்தையில் கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், நாமக்கல் போன்ற மாவட்டங்களிலிருந்து விற்பனைக்காக விவசாயிகள் மாடுகளை கொண்டு வருகின்றனர். தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து மாடுகளை வாங்க விவசாயிகள் வருகின்றனர். மாடுகளை விற்கும் விவாசாயிகளும் வாங்கும் விவசாயியும் நேரடியாக விலை நிர்ணயித்து கொள்வது இந்த சந்தையின் தனி சிறப்பு.

நேற்று 52 கால்நடைகள் வந்திருந்தன. இதில் காங்கயம் இன மாடுகள் ரூ.25 ஆயிரம் முதல் அதிகபட்சமாக 95 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. பசுங்கன்றுகள் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.40 வரை விற்பனையானது. காளை கன்றுகள் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.45 ஆயிரம் வரை விற்கப்பட்டது. நேற்று நடைபெற்ற சந்தையில் 33 கால்நடைகள் ரூ.11 லட்சத்திற்கு விற்பனை நடைபெற்றது என சந்தைமேற்பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

## திருப்பூர் எஸ்பி அலுவலக

# சட்ட ஆலோசகர் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு

திருப்பூர், ஜூலை 22: திருப்பூர் மாவட்ட எஸ்பிக்கு உதவியாக சட்ட ஆலோசகர் பணியிடத்திற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவதாக மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருப்பூர் மாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை சட்டம் படித்திருக்க வேண்டும் அல்லது ஒருங்கிணைந்த 5 வருட சட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். தமிழ்நாடு பார் கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். குறைந்தது 5 வருட சட்ட அனுபவ துறை மற்றும் குற்றவியல், மத்திய தீர்ப்பாயம் அல்லது மாவட்ட நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் முன் அனுபவம் பெற்று இருக்க வேண்டும்.

குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவராக இருக்க கூடாது. இப்பணிக்கு ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்கள் பணித்திறனை பொறுத்து ஓராண்டுக்கு மேல் பணி நீட்டிப்பு வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட ஆலோசகர் பதவிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.20,000 வழங்கப்படும். காவல்துறை சார்ந்த நிர்வாகம் மற்றும் குற்றவியல் மனுக்கள் மீது எதிர் வாதுரை தயார் செய்தல், பத்திவாரி குறிப்புகள் தயார் செய்து ரிட் மனுக்கள் மீதான மேல்முறையீடு தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தகுதி உடையவர்கள் அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மாவட்ட எஸ்பியை நேரில் சந்தித்து விண்ணப்பங்களை அளிக்கலாம். இதற்கான கடைசி நாள் ஆகஸ்ட் 5ம் தேதி. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## புகையிலைப்பொருட்கள் விற்ற

# 25 கடைகளுக்கு சீல்; ரூ.6.50 லட்சம் அபராதம்

### உணவு பாதுகாப்புத்துறை அதிரடி



உணவு பாதுகாப்பு அலுவலர்கள் 25 கடைகளில் புகையிலைப்பொருட்கள் விற்பனை செய்வதை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

திருப்பூர், ஜூலை 22: திருப்பூரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலும் ஒழிக்க திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் விஜய லலிதாம்பிகை தலைமையில் மாவட்டத்திலுள்ள உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கடந்த 14ம் தேதி முதல் மாவட்டம் முழுவதும் மேற்கொண்ட திடீர் ஆய்வில் 25 கடைகளில் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதை கண்டறிந்தனர்.

தொடர்ந்து, 25 கடைகளும் பூட்டி சீலிடப்பட்டதோடு மேற்படி கடைகளுக்கு ரூ.6.50 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலும் ஒழிக்கும் வகையில் முதல் முறையாக விற்பனை செய்யும் குற்றத்திற்கு ரூ.25 ஆயிரம் அபராதம் மற்றும் 15 நாட்கள் கடையை மூடி சீலிடுதல், 2ம் முறை குற்றத்திற்காக ரூ.50 ஆயிரம் அபராதம் விதிப்பதோடு 30 நாட்களுக்கு கடையை மூடி சீலிடும் நடவடிக்கையும் மற்றும் 3ம் முறை குற்றத்திற்காக ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டும், 90 நாட்களுக்கு கடையை மூடி சீலிட்டும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முக்கியமாக பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில், பெட்டி கடைகள் மற்றும் டாஸ்மாக் பார் பெட்டி கடைகளில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பதை கண்டறிந்து முற்றிலும் ஒழிப்பதற்கு தொடர் நடவடிக்கை மாவட்ட முழுவதும் எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் இத்தகைய பான் மசாலா மற்றும் புகையிலை பொருட்கள் விற்கப்படுவதை உடனடியாக 94440-42322 என்ற வாட்சப் எண்ணில் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

## கட்டுமான தொழிலாளர் சங்க மாநாடு

திருப்பூர், ஜூலை 22: சிஐடியு திருப்பூர் மாவட்ட கட்டிட கட்டுமான தொழிலாளர் சங்க 14வது தெற்கு தாலுகா கோரிக்கை மாநாடு திருப்பூர் மத்திய பஸ் நிலையம் அருகே பி.ஆர்.நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு தாலுகா தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். தாலுகா துணை தலைவர் பிச்சை சங்க கொடியேற்றி வைத்தார். துணை செயலாளர் செல்வக்குமார் வரவேற்றார். தாலுகா செயலாளர் ரமேஷ் வேலை அறிக்கையையும், பொருளாளர் ரத்தினசாமி வரவு-செலவு அறிக்கையையும் வாசித்தனர். தொடர்ந்து மாநாட்டை தொடக்கி வைத்து சிஐடியு மாவட்ட தலைவர் மூர்த்தி பேசினார். தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. அதில் புதிய தலைவராக பொம்முதுரை, செயலாளராக ரமேஷ், பொருளாளராக செல்வகுமார் உள்ளிட்ட 21 பேர் கொண்ட புதிய கமிட்டி உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இந்த மாநாட்டில் கட்டுமான பெண் தொழிலாளர்களுக்கு 55 வயது முதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கட்டுமான தொழிலாளர்கள் ஓய்வூதியத்தை ரூ.3 ஆயிரமாக உயர்த்த வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.






# திருப்பூரில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை மீறும் கனரக வாகனங்கள்



திருப்பூர் மாநகருக்குள் தடை செய்யப்பட்ட நேரத்தில் கனரக வாகனங்கள் அதிக பாரங்களை ஏற்றியபடி செல்வது அதிகரித்து வருகிறது.

திருப்பூர், ஜூலை 22: திருப்பூர் மாநகரில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், விபத்தை தடுக்கவும் மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் கனரக வாகனங்களுக்கு நேர கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் கனரக வாகனங்கள் மாநகருக்குள் வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வப்போது போக்குவரத்து காவல்துறையினர் விதிமுறைகளை மீறி வரும் கனரக வாகனங்களுக்கு அபராதம் விதித்து வருகின்றனர். இருப்பினும் திருப்பூரில் கனரக வாகனங்கள் தொடர்ந்து விதிமுறைகளை மீறி மாநகர பகுதிக்குள் இயக்கப்பட்டு வருகிறது. நேர கட்டுப்பாடு மற்றும் அதிக பாரம் ஏற்றி வரும் கனரக வாகனங்களுக்கு அபராதம் விதிப்பதோடு, தொடர்ந்து இது போன்ற செயலில் ஈடுபடாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

## ஓய்வூதியதாரர்கள் வீட்டில் இருந்தபடியே

# டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்க ஏற்பாடு

திருப்பூர், ஜூலை 22: திருப்பூர் அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் பட்டாபிராபன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் தங்கள் உயிர்வாழ் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. நேரில் சென்று ஓய்வூதியதாரர்கள் உயிர்வாழ் சான்றிதழ் சமர்பிக்க கடும் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். இதனை தவிர்க்கும் விதமாக அஞ்சலகதுறையின் கீழ் செயல்படும் இந்தியா போஸ்ட் பேமண்ஸ் வங்கி ஓய்வூதியதாரர்களின் வீட்டு வாசலிலேயே பயோமெட்ரிக் முறையை பயன்படுத்தியும், முக அடையாளம் வைத்தும், டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழை சமர்பிக்க முடியும்.

ஓய்வூதியதாரர்கள் தங்கள் பகுதி தபால்காரரிடம் ஆதார், செல்போன் எண், பி.பி.ஓ எண் மற்றும் ஓய்வூதிய வங்கி கணக்கு விவரங்களை தெரிவித்து கைவிரல் ரேகை பதிவு செய்தால் ஒரு சில நிமிடங்களில் டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழை தபால்காரர்கள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

இதற்கு ரூ.70 கட்டணம் செலுத்த வேண்டும். கடந்த ஆண்டு சுமார் 1.75 லட்சம் தமிழக அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள் வீட்டில் இருந்தபடியே இந்த சேவையை பெற்றுள்ளனர்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.


**OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.**

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர்–641607, தமிழ்நாடு. கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது மாடி, என்.சி.கேல்கர் மார்க், கட்காரி சவுக், தாதர்(மேற்கு), மும்பை–400028. தொலைபேசி.: 022–69231111

**சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 13(2)ன் படியும் பிரிவு 13(13) கீழ் கடன்தாரர்களுக்கான அறிவிப்பு**

கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் ஆகிய நீங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தும் பிணையத்துக்காக அசையும்/அசையா சொத்துகள் மீது கடனீட்டுச் சொத்து உரிமைகளை நிறைவேற்றி தந்ததன் மூலம், பூனாவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎச்எஃப்எல்) (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது) வசமிருந்து நிதி உதவி பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் கடன்களை திருப்பிச் செலுத்துவதில் தவறியிருப்பதால், தேசிய வீட்டு வசதி வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க உங்கள் கடன் கணக்கு பிஎச்எஃப்எல் மூலம் செயல்படா சொத்துகள்(NPA) ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பிஎச்எஃப்எல் நிறுவனத்தின் 30–09–2021 தேதியிட்ட ஒதுக்கீடு ஒப்பந்தத்தின்படி, நிதி உதவிகள் அதன் அனைத்து பத்திரம், கோருரிமை மேலும் உரிமையுடன் பிஎச்எஃப்எல் நிதி சொத்துகள் கீழ்காணும் அனைத்து கடனீட்டு உரிமைகளுடன் 'ஓம்காரா பிஎஸ் 26/2021–2022 பொறுப்பாட்சியின்' பொறுப்பாளராக திறனில் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்(ஓஏஆர்பிஎல்). பெயரில் உரிமை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீட்டாளரால் வழங்கப்பட்ட நிதி உதவி நோக்கத்துக்காகச் செயல்படுத்தப்பட்ட நிதி மற்றும் உத்தரவாதம் மற்றும் கடனீட்டு ஆவணங்கள் உள்ளிட்ட நிதி மற்றும் கடனீட்டு ஆவணங்கள் படி ஒதுக்கீட்டாளர் என்ற முறையில் ஓஏஆர்பிஎல் நிறுவனம் அனைத்து தவணைகளையும் கைகொள்ளவும் மற்றும் அனைத்து உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பலன்களை அமல்படுத்தவும் உரிமை பெற்றுள்ளது.

மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டைப் பின்பற்றியும் மற்றும் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்தவும் கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே குறிப்பிட்ட முழு நிலுவைத்தொகையை அதற்குரிய மேற்கொண்டு வட்டியுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு தங்களை கோரியிருந்தார்.

விவரங்கள் பின்வருமாறு

| வ. எண் | கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர் & முகவரி ஏனையவை | கடன் கணக்கு எண். கடன் தொகை(ரூ.)& கடன் வழங்கப்பட்ட தேதி | செயல்படா சொத்து நாள் & கோரிக்கை அறிவிப்பு நாள் | 31-07-2021 தேதிப்படி நிலுவைத்தொகை (₹) |
|---|---|---|---|---|
| 1 | K. தண்டபாணி த/பெ கந்தன்சுவாமி (கடன்தாரர்) பாரதி க/பெ K.தண்டபாணி (உப–கடன்தாரர்) அனைவரும் வசிப்பிடம்: எஸ்.எஃப்.651, மனை எண்.19, SOR எண்: 542, பி.ஏ.பி. நகர் முதல் தெரு, சீரங்காடு, நல்லூர் கிராமம், திருப்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641608. தவிர: 32, ராயபுரம், கிழக்குத் தெரு, திருப்பூர், தமிழ்நாடு 641601. | HM/0118/H/100012 Rs.31,00,000/- & 31.05.2017 | 31/03/2018 & 19/07/2024 | ₹34,47,429.66 (ரூபாய் முப்பத்தி நான்கு லட்சத்து நாற்பத்தேழு ஆயிரத்து நானூற்று இருபத்தி ஒன்பது மற்றும் பைசா அறுபத்தி ஆறு மட்டும்) மேலும் பணமாக மீட்கும் தேதி வரை அதன்மீது மேற்கொண்டு வட்டி மற்றும் அதற்குரிய செலவுகளுடன். |

அட்டவனை A அட்டவனை சொத்து: (அசையா சொத்தின் விவரங்கள்:)

அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கொண்ட அடமான சொத்து திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, நல்லூர் முனிசிபாலிட்டி எல்லை, நல்லூர் கிராமம் திருப்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641608 சர்வே எண்.651, புஞ்சை ஏக்கர் 4.29 லெவி ரூ.2.44 பிஏபி நகர் லேஅவுட்டில் காலிபகுதியும் சேர்த்து வீடு மற்றும் மனை எண்.19ல் உள்ளது. வடக்கு: மனை எண்.20, கிழக்கு: 25 அடி அகல வடக்கு தெற்கு லேஅவுட் சாலை, தெற்கு: 30 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, மேற்கு: மனை எண்.18 மற்றும் லட்சுமியின் வீடு. இதற்கிடையே வடக்கு 2612 ச.அடி மற்றும் வீடு ஏக்கர் 0.05 செண்ட்கள் 432 ச.அடி மற்றும் காலி பகுதி மற்றும் வீடு வடக்குப்பகுதி வழி 300 ச.அடி அத்துடன் இரண்டு அறைகள் மற்றும் தவிர டைல் பதிக்கப்பட்ட கூரை மற்றும் கதவுகளுடன் கூடிய நான்கு வீடுகள் மற்றும் பொருத்தப்பட்ட முன் தகவு, பாத்ரூம் கழிவறை மற்றும் காலி பகுதி உட்பட. மின் இணைப்பு ஒயரிங் இணைப்பு மற்றும் டெபாசிட் உள்ளிட்டவை. பாதைக்காக லேஅவுட் சாலை கொடுக்கப்பட்டுள்ளது. தவிர போக்குவரத்துக்கு பொதுவான பாதை உள்ளது. தவிர போர்வெல் குடிநீர் வழங்குவதற்கான விதியும் உள்ளது. வீட்டு கதவு எண்.542, மின் இணைப்பு எண்.2619. இந்த சொத்து நல்லூர் முனிசிபாலிட்டியில் உள்ளது.

ஒருவேளை நீங்கள் 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய முழு நிலுவைத்தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், கீழே கையொப்பமிட்டவர் சர்ஃபாசி சட்டத்தின் விதிகள் கீழ் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை அமலாக்கம் செய்யும் நிர்பந்தத்திற்கு ஆளாவார். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, ஓஏஆர்பிஎல் நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இன்றி நீங்கள் விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில், இங்கே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகள் எதையும் கையாள அல்லது பெயர்மாற்றம் செய்வதற்கு தடைசெய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். இந்த விதியை மீறுவது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (13) கீழ் குற்றமாகும். சட்டத்தின் பிரிவு 33ன்படி மற்றும் பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரியதாகும்.

இடம்: கோயம்புத்தூர்
நாள்: 20-07-2024

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெடுக்காக
(ஓம்காரா பிஎஸ்26/2021-2022 பொறுப்பாட்சியின் திறனில் செயல்படும் ஓம்காரா ஏஆர்சி)

**ICICI Home Finance**

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ வங்கி டவர், பாந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400059, இந்தியா.
கிளை அலுவலகம்: கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018

[விதி 8(6) விதிமுறையை காண்க]

**அசையாச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கையக சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண் | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலம் நாள் & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | P உமாமகேஸ்வரி (கடன்தாரர்) K பழனிச்சாமி (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண் LHCBT00001354095 & LHCBT00001354097 | எஸ்.எஃப்.எண்.162, வீட்டு மனையாக்கப்பட்டுள்ளது. இந்த மனை எண்.6, சரவம்பட்டி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா, காந்திபுரம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தில் உள்ளது. | 72,60,427/– ஜூலை 16, 2024 | ₹. 62,28,495/- / ₹. 6,22,850/- | ஜூலை 29, 2024 காலை 11.00 மணி பிற்பகல் 03.00 மணி | ஆகஸ்ட் 09, 2024 பிற்பகல் 02.00 மணி 03.00 மணி |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை குளோபல் டெக் இணையதளத்தில் (URL இணைப்பு– https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் ஆகஸ்ட் 08, 2024 மாலை 05.00 மணிக்கு முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018 இடத்தில் ஆகஸ்ட் 08, 2024 மாலை 04.00 மணி அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்–641018 இடத்தில் ஆகஸ்ட் 08, 2024 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து கோயம்புத்தூரில் மாற்றத்தக்க வகையில் "ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிட்.–ஏலம்" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, 9920807300 என்ற எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதாரர் நெக்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com.

நாள் : ஜூலை 22, 2024
இடம் : கோயம்புத்தூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
CIN Number - U65922MH1999PLC120106